


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் பிப்ரவரி 02 * 2026 * மலர் -1 * இதழ்-244* VOL-1 * ISSUE-244 விலை ரூ.3 * பக்கம் -4

# பல்வேறு முக்கிய அறிவிப்புகள் வெளியீடு: மத்திய பட்ஜெட் இன்று தாக்கல்!

## தொடர்ந்து 9– ஆவது ஆண்டாக சமர்ப்பித்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சாதனை!!

புதுடெல்லி, பிப். 02–

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2026–27–ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை மக்களவையில் இன்று சமர்ப்பித்தார். இந்த பட்ஜெட்டில் பல்வேறு சலுகைகள் மற்றும் முக்கிய அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன. தொடர்ந்து 9 ஆண்டுகளாக மத்திய பட்ஜெட்டை சமர்ப்பித்துள்ள சாதனையாளராக நிர்மலா சீதாராமன் உள்ளார். சுதந்திர இந்திய வரலாற்றிலேயே நிதி இலாகாவை கவனிக்கும் பெண் என்ற சிறப்பும் அவருக்கே உரியதாகும்.

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் கடந்த மாதம் 28–ஆம் தேதி காலை தொடங்கியது. மக்களவையும் மாநிலங்களவையும் அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு உரையாற்றினார். இந்த ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் சம்பிரதாய முறைப்படி அவர் உரைநிகழ்த்தினார். முன்னதாக அவர் ஜனாதிபதி மாளிகையில் இருந்து நாடாளுமன்றத்துக்கு பாரம்பரிய முறைப்படி வந்தார். அவரை மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா ஆகியோர் அவைக்குள் அழைத்துச் சென்றனர்.

ஜனாதிபதி தனது உரையில் மத்திய அரசின் சாதனைகளைப் பட்டியலிட்டார். அதுமட்டுமல்லாமல் மத்திய அரசு எதிர்காலத்தில் எடுக்க இருக்கும் நடவடிக்கைகளையும் அவர் எடுத்துரைத்தார்.

29–ஆம் தேதி பொருளாதார ஆய்வறிக்கையை நாடாளுமன்றத்தில் நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்தார். இன்று ஞாயிற்றுக்கிழமை என்ற போதிலும் 2026–27–ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார். பட்ஜெட்டை தொடர்ந்து 9–ஆவது முறையாக மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ளது வரலாற்றுச் சாதனையாகும். அதுமட்டுமல்லாமல் சுதந்திர இந்திய வரலாற்றிலேயே நிதி இலாகாவை கவனிக்கும் பெண் என்ற சிறப்பும் அவருக்கே உரியதாகும். நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு முன் ஜனாதிபதி மாளிகைக்கு நிர்மலா சீதாராமன் சென்றார். ஜனாதிபதி திரவுபதி முர்மு, நிர்மலா சீதாராமனுக்கு வாழ்த்தும், ஆசியும் தெரிவித்தார்.



வழக்கம் போல இந்த ஆண்டும் பற்றாக்குறை பட்ஜெட் தான் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. தொழில் துறையினர், நடுத்தரப் பிரிவினர், மாத ஊதியம் பெறுவோர் உள்ளிட்டோரின் எதிர்பார்ப்புகள் சிலவற்றை நிறைவேற்றும் வகையில் பட்ஜெட்டில் சில முக்கிய அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன.

வேளாண்மையை மேம்படுத்துவது குறித்தும் சில அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன.

தற்போதுள்ள பொருளாதாரச் சூழலில் மக்களின் வாங்கும் திறனை உயர்த்தும் வகையிலும் மக்களின் கைகளில் கூடுதல் பணம் புழங்க வழி வகை செய்யும் பொருட்டும் சில அறிவிப்புகள் பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ளன.

பொது பட்ஜெட்டுடன் ரெயில்வே பட்ஜெட் ஏற்கனவே இணைக்கப்பட்டு விட்டது. குறிப்பிட்ட வழித்தடங்களில் பல்வேறு எக்ஸ்பிரஸ் ரெயில்கள் இயக்கப்படும் என்பது பற்றிய அறிவிப்பும் பட்ஜெட்டில் இடம் பெற்றிருக்கிறது. இதில் தமிழ்நாட்டுக்கும் பயன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு, வேளாண்மை, ஊரக வேலை வாய்ப்பு உள்ளிட்டவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

முக்கியத் துறைகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும். தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்களம், அசாம் ஆகிய 4 மாநிலங்களிலும் யூனியன் பிரதேசமான புதுச்சேரியிலும் இன்னும் சுமார் 2 மாதங்களில் சட்டசபைத் தேர்தல் நடைபெற இருக்கிறது.

இதைக் கருத்தில் கொண்டும் பட்ஜெட்டில் சில அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது.

பட்ஜெட்தாக்கலைத்தொடர்ந்து 2–ஆம் தேதி முதல் 4–ஆம் தேதி வரை ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும்தீர்மானத்தின்மீதான விவாதம் நடைபெற இருக்கிறது. பட்ஜெட் கூட்டத் தொடர் 2 கட்டங்களாக நடைபெற இருக்கிறது. முதல் கட்ட கூட்டத் தொடர் பிப்ரவரி மாதம் 13–ஆம் தேதி முடிவடைகிறது.

2–ஆவது கட்ட கூட்டத் தொடர் மார்ச் 9–ஆம் தேதி தொடங்கி ஏப்ரல்2–ஆம்தேதிநிறைவடைகிறது.

இக்கூட்டத் தொடரில் காஷ்மீர் விவகாரம், மணிப்பூர் பிரச்சினை, வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம், விபி ஜி ராம் ஜி சட்டம் உள்ளிட்டவை தொடர்பாக புயல் வீச வாய்ப்புள்ளது என்று டெல்லி அரசியல் வட்டாரத் தகவல் தெரிவிக்கிறது.



திருச்செந்தூர் முருகன் கோவிலில் தைப்பூச திருவிழாவை முன்னிட்டு சண்முக விலாஸ் மண்டபம் முன்பு லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்திருக்கும் காட்சி.



தைப்பூசத்தையொட்டி சேலம் மாவட்டம், எடப்பாடியில் இருந்து பழனிக்கு பாதயாத்திரையாக 200–க்கும் மேற்பட்ட பக்தர்கள் காவடி எடுத்து வந்தனர்.



தைப்பூச தேர்திருவிழாவையொட்டி திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சிவன்மலை முருகன் கோவிலில் சுவாமி ரதத்துக்கு எழுந்தருளுதல் நிகழ்ச்சி இன்று காலை நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

### அவிநாசியில்

## போலி நகைகளை கொடுத்து ரூ.15 லட்சம் மோசடி!

### வட மாநில இளைஞர்கள் இருவர் கைது!!

அவிநாசி,பிப்.2

அவிநாசி,கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகே ஊமப்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் நடராஜ். இவர் தனது மனைவி யசோதா(51) மற்றும் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார்.

நடராஜ் தனது மனைவியுடன் அதே இடத்தில் உணவகம் நடத்தி வருகிறார். இந்நிலையில் நடராஜின் உணவகத்திற்கு கடந்த நவம்பர் மாதம் முதல் நாள்தோறும் மதிய வேளைகளில் மகாராஷ்டிர மாநிலத்தை சேர்ந்த சங்கர் என்பவர் தனது அம்மா மற்றும் தம்பி யுடன் சாப்பிட வந்துள்ளார். சில நாட்களிலேயே சங்கர் நடராஜின் மனைவி யசோதாவிடம் தாங்கள் சாலைப் பணி செய்து வருவதாக சொல்லி நன்கு தமிழில் பேசி பழகியுள்ளர். யசோதாவும் உள்ளன்போடு பேசி பழகி வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த வருடம் டிசம்பர் மாதம் 5ம் தேதியன்று, சங்கர் யசோதாவிடம் தாங்கள் பெங்களூருவில் சாலை வேலை செய்த போது தங்க நகை கண்டெடுத்ததாகவும், தனது அம்மாவிற்கு உடல் நலம் சரியில்லாததால் வைத்தியம் பார்க்கவும், தனது தங்கைக்கு திரும



ணம் செய்து வைக்க வேண்டியும் பணம் தேவைப்படுவதாகவும், தன்னிடம் உள்ள கண்டெடுத்த தங்க நகைகளை தான் ஒரு மகாராஷ்டிரா மாநில ஆள் என்பதால் இங்கு விற்க பயமாக இருப்பதாகவும், 30 பவுன் கொண்ட அந்த நகையை 15 லட்சம் ரூபாய்க்கு யசோதாவிற்கு தருவதாகவும் ஆசை வார்த்தை கூறியுள்ளார். மேலும் அந்த நகையின் ஒரு பகுதி என 2 கிராம் எடையுள்ளசில தங்க குண்டுகளையசோதாவிடம் கொடுத்து இதன் தரத்தை நீங்களே பரிசோதித்து பார்த்து விட்டு சொல்லுங்கள் மீதி நகையை தருகிறேன் எனவும் சொல்லியுள்ளார். மாதிரி தங்கத்தை வாங்கிய யசோதா சிலநாட்கள்அதைபரிசோதிக்காமலேயே இருந்துள்ளார்.

தொடர்ந்து நாள் தோறும் சங்கர் யசோதாவிற்கு போன் மூலமாக தொடர்பு கொண்டு, அவசரமாக அம்மா மருத்துவத்திற்கும், தங்கை திருமணத்திற்கும் பணம் தேவைப்படுகிறது என்று நச்சி வந்துள்ளார். கடந்த 10ம் தேதி மேட்டுப்பாளையத்தில் உள்ள நகைக்கடை ஒன்றில் சங்கர்கொடுத்தமாதிரிதங்ககுண்டுகளையசோதாகொடுத்து சோதித்து பார்த்ததில் அது 916 தங்கம் என தெரியவந்தது. இதையடுத்து, யசோதா தனது மகளின் நகைகளை அடகு வைத்தும், சீட்டு பணத்தை எடுத்தும் 15 லட்சம் ரூபாயை ரெடி செய்துள்ளாார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி கூகளூர் காந்தி கல்வி நிலையம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை பார்வையிட்டார்.



கோவை சின்னவேடம்பட்டி, மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவ முகாமை மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் துவக்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மருத்துவ உபகரணப் பெட்டகத்தினை வழங்கினார்.



தைப்பூசத்தையொட்டி கோவையில் 180 பால்குடம் ஊர்வலம் நடந்தது.இந்த நிகழ்வை மாநகராட்சி வடக்கு தலைவர் வே. கதிர்வேல் மற்றும் மாமன்ற உறுப்பினர் சரண்யா செந்தில்குமார் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

# மத்தூர் அருகே ஜோகிப்பட்டி கிராமத்தில் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ ஏழு ஊர் மாரியம்மன், ஸ்ரீ வேடியப்பன் குதிரை சிலை ஆகிய கோவில்களின் மகா கும்பாபிஷேகம்!



மத்தூர், பிப்.2

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியம், அந்தேரிப்பட்டி ஊராட்சி ஜோகிபட்டி கிராமத்தில் எழுந்தி அருளியுள்ள ஸ்ரீ ஏழு ஊர் மாரியம்மன் கோவில் வளாகத்தில் முப்பெரும் தெய்வங்களான ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ ஏழுவூர் மாரியம்மன், ஸ்ரீ வேடியப்பன் குதிரை சிலை கோவில்களின் அஷ்டபந்தனமகாகும்பாபிஷேகம் நடைபெற்றன. விழாவிற்கு முன்னதாக சுவாமிக்கு ,ஜன 29ம் தேதி மாலை 6 மணிக்கு மேல் இரவு 10 மணிக்குள் முளைப்பாரி ஊர்வலம், விநாயகர் வழிபாடு, எஜமானர்சங்கல்பம், வாஸ்து பூஜை, வாஸ்து ஓமம், கங்கனம் கட்டுதல், புண்யா வசனம், கலசங்கள் யாகசாலை புறப்படுதல், முதல் காலயாக பூஜை ஆரம்பம், பூர்ணாஹூதி தீபாராதனை அன்று இரவு 10 மணிக்கு ஸ்ரீ விநாயகருக்கு அஷ்டபந்தன மருந்து சாத்துதல் உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து ஜன 30ம் தேதி காலை 7.30 மணிக்கு மேல் 10 மணிக்குள் இரண்டாம் காலயாக பூஜை ஆரம்பம் தத்துவர்த்தனை, வேதிகா சர்னை,

மூலமந்திர ஹோமங்கள், 108 திரவிய ஓமங்கள், தம்பதி சலங்கல்பம், நாடி சந்தானம், பூர்ணாகுதி, தீப ஆராதனை, கலசங்கள் புறப்படுதல் உள்ளிட்ட பூஜைகள் நடைபெற்றன. இதனையடுத்து ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ ஏழு ஊர் மாரியம்மன், ஸ்ரீ வேடியப்பன், குதிரை சிலை ஆகிய கோவில்களின் விமான கோபுர கலசங்களுக்கு சிவாச்சாரியார்களால் புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றன. தொடர்ந்து சுவாமிக்கு சிறப்பு அலங்காரமும், அபிஷேக ஆராதனையும், புனித தீர்த்தமும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது .

விழா குழுவினர்களால் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேக விழாவிற்கு சுற்றுவட்ட பகுதியைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




# நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் ரூ 1.15 கோடியில் வளர்ச்சி பணிகள்!

## கணபதிராஜ்குமார் எம்.பி. தொடங்கி வைத்தார்!!



பெ.நா.பாளையம்,பிப்.2

கோவை நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் ரூ 1.15 கோடியில் வளர்ச்சி பணிகள் செய்ய பூமி பூஜை நடைபெற்றது.இப்பணிகள் நடைபெற துவக்க விழாவில் செயல் அலுவலர் எம்.ஆனந்தன் வரவேற்று பேசினார். தலைவர் மரகதம் வீரபத்திரன் தலைமை வகித்தார்.மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி,ஒன்றிய செயலாளர் எஸ்.கார்த்திக்,நகர செயலாளர் ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக கணபதி ராஜ்குமார் எம்.பி கலந்து கொண்டு அங்காளம்மன் நகர், அன்னை இந்திரா நகர் மேசியா கார்டன், தனலட்சுமி நகர், ராஜேந்திரா நகர,பகவான் கார்டன் பேஸ் 3 ஆகிய பகுதியில் தார் சாலை ரூ 1.15 கோடியில் மேம்பாடு செய்ய பணிகளை துவக்கி வைத்தார்.

இதில் துணைத்தலைவர் சண்முகசுந்தரம் கவுன்சிலர்கள்,சரவணன்,சித்ரா,சுமதி,விமலா உட்பட பலர்கலந்து கொண்டனர்.

# வாணியம்பாடி அருகே கீழ் பள்ளிப்பட்டு கிராமத்தில் பகுதி நேர நியாய விலை கடை!

## ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.சி.வில்வநாதன் திறந்து வைத்து விற்பனை தொடங்கினார்!!



வாணியம்பாடி, பிப்.2

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடிஅடுத்தகீழ்பள்ளிப்பட்டுகிராமத்தில் பகுதி நியாய விலை கடை அமைத்து தர வேண்டும் என்று பகுதி மக்கள் ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ். ஞானவேலனிடம் கோரிக்கை வைத்தனர். இதன்அடிப்படையில்பள்ளிப்பட்டு பகுதியில் இயங்கி வரும் நியாய விலை கடையில் மொத்தம் 552 ரேஷன் அட்டைகள் இருந்துள்ளது. இதில் இருந்து 312 ரேஷன் அட்டைகள் பிரித்து கீழ் பள்ளிப்பட்டு பகுதியில் பகுதி நேர நியாய விலை கடை அமைத்து அதன் திறப்பு விழா இன்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கூட்டுறவு சங்க துணை பதிவாளர் சென்னம்மாள் தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.கோவிந்தம்மாள் பெருமாள், மாவட்ட பிரதிநிதி சிவகுமார், ஒன்றிய பொருளாளர் எம்.சி.தசரதன், ஒன்றிய துணைச் செயலாளர் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு சங்க வருவாய் ஆய்வாளர் செந்தில் குமார் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.சி.வில்வநாதன், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வி. எஸ்.ஞானவேலன் ஆகியோர் கலந்து கொண்டு பகுதி நேரம் நியாய விலை கடையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்தனர்.பின்னர் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கினர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய குழு உறுப்பினர் லக்ஷ்மி பொன்னம்பலம், மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஞானசேகரன், செல்வம், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.முடிவில் கடை விற்பனையாளர் முரளி நன்றி கூறினார்.



தருமபுரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சார்பில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத்திருவிழா இது நம்ம ஆட்டம் 2026 மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர் / வீராங்கனைகளுக்கு பரிசுத்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், வழங்கினார்கள். உடன் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, நகர மன்ற துணைத்தலைவர் நித்யா அன்பழகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஐ.ஜோதி சந்திரா, மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அலுவலர் தே.சாந்தி, மாவட்ட தீயணைப்பு அலுவலர் செல்வி.ப.அம்பிகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.



சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு, சேலம் ஈகோ ஃபிரிக் ஆர்கனைசேஷன் சார்பில், தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்த இருசக்கர வாகன பேரணி, சேலம் பெரிய புதூர் அழகாபுரம் பகுதியில் உள்ள புனித ஜான்ஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று தொடங்கியது. இந்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியில், 100க்கும் மேற்பட்ட இருசக்கர வாகன ஓட்டிகள், தலைக்கவசம் அணிந்து ஆர்வத்துடன் பேரணியில் பங்கேற்றனர். இந்தப் பேரணி பள்ளி மைதானத்தில் தொடங்கி, அழகாபுரம் காவல்நிலையம் வழியாக, ஐந்து ரோடு, ஏவிஆர் ரவுண்டானா பகுதியில் சென்று நிறைவடைந்தது. போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும், ஈகோ ஃபிரிக் ஆர்கனைசேஷன் சார்பில், போட்டியில் பங்கேற்றதற்கான பாராட்டு நற்சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்தப் போட்டிகளை, , தொழிலதிபர் ஹீலர் பிரசன்னா, சேலம் பாவை கண் மருத்துவமனை மருத்துவர் நிவாஸ் செங்கோட்டையன், ஈகோ ஃபிரிக் அமைப்பின் நிறுவனர் வருண், அன்பை பகிர்வோம் நிறுவனத்தின் நிறுவனர் சுதர் பிரியன், உள்ளிட்ட ஏராளமான கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கடன் தொல்லையால் நகை பட்டறை தொழிலாளி தற்கொலை!

கோவை,பிப்.2

கோவைசெல்வபுரம்தெலுங்குபாளையம் பகுதியை சேர்ந்தவர்தியாகராஜன் (39) தங்க நகைபட்டறைதொழிலாளி, இவரதுமனைவிரேவதி(38).இவர்களுக்கு12 வயதில்மகள்உள்ளார்.ணணஇந்த நிலையில் தியாகராஜனுக்குஅதிகளவில்கடன்இருந்ததாகதெரிகிறது,அதனைதிருப்பிசெலுத்தமுடியாமல்தியாகராஜன் அவதிஅடைந்துவந்தார்,இதனால்மனவேதனைஅடைந்ததியாகராஜன்தற்கொலைசெய்துகொள்ளய முடிவு செய்தார்,பின்னர்சம்பவத்தன்றுசயனைடுகலந்துகுடித்தார்

.பின்னர் வீட்டிற்குவந்தஅவர்அந்தசயனைடுகலந்த குளிர்பானத்தைதனதுமகளுக்கும்கொடுத்தார்,சிறிதுநேரம்கழித்துதியாகராஜன்சயனைகுடித்துமகளுக்குகொடுத்ததை தனது மனைவிரேவதியிடம் தெரிவித்தார். இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர், இருவரையும் மீட்டு கோவைஅரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்,அங்கு தியாகராஜனை பரிசோதனை செய்த டாக்டர் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தார்,அவரது மகளுக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து காப்பாற்றினர், இதுகுறித்து செல்வபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கிராம நிர்வாக அலுவலர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# மத்திய அரசுக்கு எதிராக சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!



சேலம்,பிப்.2

சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கபடி சார்பில், மகாத்மா காந்தியின் பெயரில் துவங்கப்பட்ட 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ள மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிய, மத்திய அரசை கண்டித்து, சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சேலம் மாநகராட்சி துணை மேயருமான சாரதா தேவி தலைமையில், மத்திய அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். வெள்ளிக்கிழமை சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சாரதா தேவி, 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் வேண்டுமென்று அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, காந்தியின் பெயரை மாற்றியது மிகவும் கண்டனத்துக்குரியது.

மத்திய பாஜக அரசு பொறுப்பேற்றுதில் இருந்து காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கொண்டுவரப்பட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களின் பெயர்களை, வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பெயர்களை மாற்றி, அவர்களுடைய விருப்பத்திற்கு தகுந்தார் போல, செய்வது மிகவும் கண்டிக்கத்தக்கது எனவும், இனியும் இது தொடர்ந்தால், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சேலம் மாநகர் மாவட்ட பிரிவின் சார்பில், மிகப்பெரிய போராட்டம் நடைபெறும் என சாரதா தேவி தெரிவித்தார். பின்னர் மத்திய அரசுக்கு எதிராக, பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு, கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில், சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர், துணை மேயர் சாரதா தேவி, முன்னாள் தலைவர் பாஸ்கர், தமிழ்நாடு காங்கிரஸ் பொதுச்செயலாளர் சுரேஷ், மாநகர் மாவட்ட செயலாளர் வசந்தம் சரவணன், தமிழ்நாடு ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ்தன் மாநில துணைத்தலைவர் லயன் டாக்டர் ரகுநாத், சுப்பிரமணி மற்றும் மண்டல தலைவர்கள், செயலாளர்கள், மகளிர் அணியினர், மாமன்ற உறுப்பினர் கிரிஜா குமரேசன், சோலையம்மா, தனசேகர், மகிலா காங்கிரஸ் சேலம் மாவட்ட தலைவி சுதா, கோபிகுமரன், உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சிறுமியை பலாத்காரம் செய்த வாலிபருக்கு 20 ஆண்டுகள் சிறை!

## ஊட்டி கோர்ட்டு தீர்ப்பு!!

ஊட்டி, பிப்.2

நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியை சேர்ந்த ஒரு தம்பதியின் 14 வயது மகள் அதே பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வந்தார். இந்த நிலையில் கடந்த 21 22022 அன்று பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்த சிறுமி இரவு தூங்க சென்று விட்டார். மறுநாள் காலையில் சிறுமியை காணவில்லை. அக்கம் பக்கத்தில் தேடிப் பார்த்தும் சிறுமி இல்லாததால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் இது குறித்து கூடலூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர்.

விசாரணையில் சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த கலைச்செல்வன் (வயது 25) என்பவர் ஏமாற்றி, திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைகூறிதிருப்பூருக்கு அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதில் சிறுமிக்கு உடல்நல குறைவு ஏற்பட்டது. இதனால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதுகுறித்த புகாரின் பேரில் கூடலூர் போலீசார் விசாரணை நடத்தி போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து கலைச்செல்வனை கைது செய்தனர்.



இந்த வழக்கு ஊட்டி மகிளா கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது. இதில் கலைச்செல்வன் மீதான குற்றச்சாட்டு நிருபிக்க ப்பட்டதால் அவருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ.12 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி எம்.செந்தில்குமார் உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசு சார்பில் ரூ.2 லட்சம் நஷ்ட ஈடு வழங்க மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தார்.

இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் பி.செந்தில்குமார் ஆஜராகி வாதாடினார். இதைத்தொடர்ந்து கலைச்செல்வன் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# கடன் தொல்லையால் நகை பட்டறை தொழிலாளி தற்கொலை!

கோவை,பிப்.2

கோவைசெல்வபுரம்தெலுங்குபாளையம் பகுதியை சேர்ந்தவர்தியாகராஜன் (39) தங்க நகைபட்டறைதொழிலாளி, இவரதுமனைவிரேவதி(38).இவர்களுக்கு12 வயதில்மகள்உள்ளார்.ணணஇந்த நிலையில் தியாகராஜனுக்குஅதிகளவில்கடன்இருந்ததாகதெரிகிறது,அதனைதிருப்பிசெலுத்தமுடியாமல்தியாகராஜன் அவதிஅடைந்துவந்தார்,இதனால்மனவேதனைஅடைந்ததியாகராஜன்தற்கொலைசெய்துகொள்ளய முடிவு செய்தார்,பின்னர்சம்பவத்தன்றுசயனைடுகலந்துகுடித்தார்

.பின்னர் வீட்டிற்குவந்தஅவர்அந்தசயனைடுகலந்த குளிர்பானத்தைதனதுமகளுக்கும்கொடுத்தார்,சிறிதுநேரம்கழித்துதியாகராஜன்சயனைகுடித்துமகளுக்குகொடுத்ததை தனது மனைவிரேவதியிடம் தெரிவித்தார். இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர், இருவரையும் மீட்டு கோவைஅரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்,அங்கு தியாகராஜனை பரிசோதனை செய்த டாக்டர் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தார்,அவரது மகளுக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து காப்பாற்றினர், இதுகுறித்து செல்வபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கணபதி ராஜவீதி பகுதியில் பொதுமக்கள்பயன்பாட்டிற்காகபிஎஸ்என்எல்வாயிலாககட்டணமில்லா வைஃபை வசதியை கலெக்டர் பவன்குமார் க.கிரியப்பனவர் முன்னிலையில் கணபதி ப. ராஜ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார். இதில் மேயர் ரங்கநாயகி ராமசந்திரன், ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் உள்பட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## தொடர் நாடகத்தில்

# வில்லன் மீதான ஆத்திரத்தில் டி.வி.யை அடித்து உடைத்த மூதாட்டி!

பீஜிங், பிப். 2–

திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களைப் பார்ப்பவர்கள் பெரும்பாலானோர் அதற்கு அடிமையாகி விடுகிறார்கள். தங்களுக்குப் பிடித்த கதாபாத்திரங்கள் அழும்போது அழுபவர்களும், சிரிக்கும்போது சிரிப்பவர்களும் பலர் உள்ளனர்.

தங்களுக்குப் கதாபாத்திரங்கள் அநீதியை சந்திப்பதைப் பிடித்த பார்த்து கட்டுப்பாட்டை இழக்கும் மக்களும் பலர் இன்றும் கிராமத்தில் உள்ளனர். அவ்வாறு தொடர்நாடகத்தைபார்த்த மூதாட்டி ஒருவர் கட்டுப்பாட்டை இழந்து டி.வி.யை அடித்து நொறுக்கிய சம்பவம் சீனாவில் நடந்துள்ளது.

சீனாவின் லியோனிங் மாகாணம் டாலியன் நகரை சேர்ந்த 91 வயது மூதாட்டி டி.வி. தொடர் நாடகங்களை விடாமல் பார்ப்பது வழக்கம். இதில் ஒரு நாடகத்தில், வில்லன் கதாநாயகியை மரத்தில் கட்டி வைத்து சித்ரவதை செய்த காட்சி இடம்பெற்றது. இதனால் கோபமடைந்த மூதாட்டி, வில்லனை சபித்து டி.வி. திரையில் ஒரு குத்து விட்டார். அதனால் டி.வி. 2 ஆக உடைந்தது.



ஆத்திரம் தீராமல் "அவன் எப்படி உயிருடன் இருக்க முடியும்? நாம் போலீசை அழைத்து அவனை தண்டிக்க வேண்டும்," என்று அவர் ஆக்ரோஷத்து டன் கூறுகிறார். ஏற்கனவே இதுபோல் வில்லன்களைத் தள்ளி விட்டதாக எண்ணி ஒரு டிவியை முற்றிலுமாக உடைத்துவிட்டார்.

அதன்பிறகு வேறு டி.வி. வாங்கினர். ஆனால் மூன்றே நாட்களில், பாட்டி குத்து விட்டதில் இந்த டி.வி.யும் உடைந்து விட்டதாக பேத்தி லியு கூறினார். இதையடுத்து வேறு டி.வி. வாங்கி உள்ளனர். இந்த முறை டி.வி. திரையின் முன் ஒரு பாது காப்பு கவசம் பொருத்தப் பட்டது.

# அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் இல்லை!

## ஈரான் அறிவிப்பு!!

இஸ்தான்புல்,பிப்.2–

ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து வருவோருக்கு ஆதரவாக அமெரிக்கா களமிறங்க திட்டமிட்டு உள்ளது.

இந்த விவகாரத்தில் ஈரான் மீது தாக்குதல் நடத்தும் நோக்கில் கடற்படையை ஈரானை நோக்கி டிரம்ப் அனுப்பி உள்ளார். இதனால் மத்திய கிழக்கில் கடுமையான போர்ப் பதற்றம் நீடித்து வருகிறது.

இந்த பதற்றத்தை தணிக்க துருக்கி முன்வந்துள்ளது. எனவே அந்த நாட்டுக்கு ஈரான் வெளியுறவு மந்திரி அப்பாஸ் அராக்சி நேற்று சென்றிருந்தார். அங்கே துருக்கி அதிகாரிகளை சந்தித்து பேசிய அவர், பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், 'நேர்மையான மற்றும் சமநிலையான பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயார். போருக்கு நாங்கள் தயாராக இல்லை. ஆனால் பேச்சுவார்த்தைக்கான வடிவம், இடம் மற்றும் அம்சங்கள் பொறுத்தே அதற்கான ஏற்பாடுகள் அமைய வேண்டும்' என தெரிவித்தார்.

அதேநேரம் அமெரிக்கர்களை பேச்சுவார்த்தைக்காக சந்திக்கும் திட்டம் எதுவும் இல்லை என்றும் அவர் திட்டவட்டமாக கூறினார்.

அப்போது துருக்கி வெளியுறவு மந்திரி ஹகன் பிடன் கூறுகையில், 'பிரச்சினைகளைத் தீர்க்க ராணுவ நடவடிக்கையை நாடுவதை நாங்கள் எதிர்க்கிறோம், அது பயன்தராது. பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திர நடவடிக்கைகளை மட்டுமே நாங்கள் ஆதரிக்கிறோம்' என்ற தெரிவித்தார்.



சாலைபாதுகாப்புவிழிப்புணர்வுமாதத்தைமுன்னிட்டுஉடுமலைவட்டாரபோக்குவரத்து அலுவலகம் சார்பில் விழிப்புணர்வு பேரணி நடந்தது. வட்டார போக்குவரத்து அலுவலர் பாஸ்கரன் பேரணியை துவக்கி வைத்தார்.

## திடீர் உடல்நலக் குறைவு:

# அப்போலோ மருத்துவமனையில் எச்.ராஜா அனுமதி!

சென்னை, பிப்.2

பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் நேற்று இரவு அனுமதிக் கப்பட்டார்.

தனியார் தொலைக் காட்சி சார்பில், சென்னை கிண்டியில் உள்ள நட்சத்திர ஓட்டல் ஒன்றில் நேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்று பேசினர். அதில் பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜாவும் பங்கேற்று பேசியபோது திடீரென மயங்கி விழுந்தார்.



இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த விழா ஏற்பாட்டாளர்கள் மற்றும் அரங்கத்தில் இருந்தவர்கள் உடனடியாக அவரை மீட்டு அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

தொடர்ந்து அவர் மேல் சிகிச்சைக்காக ஆயிரம் விளக்கு கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப் பட்டதில், எச். ராஜாவுக்கு மூளைக்குச் செல்லும் ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளது தெரிய வந்தது. இதையடுத்து, அவருக்குதொடர்சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# சினைமாடு இறப்பு; மூதாட்டி கதறல்!



தர்மபுரி,பிப்.2

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி அடுத்துள்ள மன்னேரி கிராமத்தை சேர்ந்த விவசாயி மாரி (60) இவரது மனைவி முத்தம்மாள் (55) இவர்கள் விவசாயம் செய்து கொண்டு கால்நடைகளை வளர்த்து வருகின்றனர்.

இவர் வளர்த்து வரும் கறவை மாடு 8 மாத சினையாக இருந்தது, இதன் மதிப்பு சுமார் ஒரு லட்சம் ரூபாய் என கூறுகின்றனர். திடிரென நேற்று உணவு எடுத்துக் கொள்ளாமல் சோர்வாக காணப்பட்டது. இதனால் அருகில் மாக்கனூரில் உள்ள கால்நடை மருத்துவர் என கூறிய தமிழ்செல்வன் (25) என்பவரை அழைத்து காட்டியுள்ளனர். கறவை மாட்டை பரிசோதித்த தமிழ்செல்வன் மாட்டிற்க்கு காய்ச்சல் அதிகமாக இருப்பதாகவும் உடனடியாக குளுக்கோஸ் மற்றும் ஊசி போட வேண்டும் என கூறி உள்ளார். தொடர்ந்து மாட்டிற்க்கு குளுக்கோஸ் மற்றும் ஊசிகளை செலுத்தினார்.

ஊசி போட்ட சிறிது நேரத்தில் கறவை மாடு பிட்ஸ் வந்தது போல் கால்களை உதைத்து கொண்டு மயக்கமானது, இதனை கண்ட தமிழ்செல்வன் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து கிளம்பி சென்று விட்டார்.

செய்வதறியாது திகைத்த மூதாட்டி அருகில் உள்ள பாப்பாரப்பட்டி கால்நடை மருத்துவரை அழைத்து காட்டினார், பரிசோதனை செய்து பார்த்ததில் கறவை மாடு உயிரிழந்தது தெரிய வந்தது. மருத்துவர்கள் விசாரித்ததில் தமிழ்செல்வன் போலீ கால்நடை மருத்துவர் என தெரிய வந்தது. இதனை தொடர்ந்து மூதாட்டி கண்ணீருடன் போலீ மருத்துவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி உறவினர்களுடன்சென்றுபாப்பாரப்பட்டிகாவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார். போலீ கால்நடை மருத்துவரால் 8 மாத சிணையாக இருந்த கறவை மாடு உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# Q3 FY26: Paytm தொடர்ந்து மூன்றாவது காலாண்டில் லாபம் - PAT 225 கோடி, வருவாய் 2,194 கோடி!

சென்னை,பிப்.2

Paytm (One 97 Communications Limited) நிறுவனம் 2026 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில் (Q3 FY26) தொடர்ந்து மூன்றாவது முறையாக லாபம் ஈட்டியுள்ளது. இந்த காலாண்டில் நிறுவனத்தின் PAT ₹225 கோடியாக உயர்ந்துள்ளது. மொத்த வருவாய் 20% வளர்ச்சியுடன் ₹2,194 கோடியாக பதிவாகியுள்ளது. EBITDA ₹156 கோடி (7% மார்ஜின்) ஆக உயர்ந்துள்ளது. அதிகரித்த பணப்பரிவர்த்தனை GMV, வணிகர் சந்தாக்கள் மற்றும் நிதி சேவை விநியோக வருவாய் இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. Paytm UPI தொடர்ந்து சந்தைப் பங்கு கூட்டி வருகிறது. கடந்த ஒன்பது மாதங்களில் Paytm UPI GMV 35% உயர்ந்துள்ளது, இதே காலத்தில் துறை வளர்ச்சி 16% மட்டுமே. பணப்பரிவர்த்தனை GMV 24% உயர்ந்து ₹6.2 லட்சம் கோடியாக உள்ளது. வணிகர் சந்தாக்கள் 27 லட்சம் அதிகரித்து 1.44 கோடியாக உயர்ந்துள்ளது. Payments services revenue 21% உயர்ந்து ₹1,284 கோடியாகவும், Net payment revenue 25% உயர்ந்து ₹613 கோடியாகவும் உள்ளது. நிதி சேவை விநியோக வருவாய் 34% உயர்ந்து ₹672 கோடியாக உள்ளது. மறைமுக செலவுகள் 8% குறைந்து ₹1,092 கோடி ஆகியுள்ளது. மற்றும் குறுக்குப்புற (crossborder) Payment Aggregator ஆக செயல்பட அனுமதி பெற்றுள்ளது.



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த ஜயனூர் கிராமத்தில்மாலதிகஜேந்திரன்எவர்கேர்கிளினிக்தொடங்கப்பட்டது, நிகழ்ச்சியில் மருத்துவர். ரகிப் அப்பாஸ் ரிப்பன் வெட்டி சரணாலயம் பிரஸ்டி கருணை இல்லத்தில் இருந்து அந்த முதியோர்கார் முன்னிலையில் இனிதே தொடங்கி வைத்தார். இதில் கருணை இல்லத்தின் உரிமையாளர். டேவிட் அவர்கள் ஊரின் பல முக்கிய பிரமுகர்கரும் கலந்து கொண்டனர். இந்த நாலில் சுமார் 100க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை மற்றும் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டது. நோயாளிகளுக்கு மருத்துவர்,ராகிப் அப்பால் மற்றும் மருத்துவர்.வனிதபிரமண்யா சிறப்பு சிகிச்சை அழைத்தனர். இறுதி முடிவில் கிளினிக் உரிமையாளர். மாலதி கேந்திரன்அனைவரையும் உபசரித்தார்.

# "ரீசார்ஜ்" - ஒரு புதிய கட்டாயம்!

சென்னை,பிப்.2

இன்று நம் வாழ்க்கையில் "ரீசார்ஜ்" என்பது ஒரு சொல்லாக இல்லாமல், ஒரு தினசரி தேவையாக மாறியுள்ளது. தொலைபேசியில்ரீசார்ஜ்முடிவடையும்முன்பே இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே, "ரீசார்ஜ் முடிவடையப் போகிறது" என்று மெசேஜ்களும் அழைப்புகளும் வந்து விழித்தெழுப்புகின்றன. அந்த நாளிலிருந்து நம் மனதில் ஒரு பதட்டம் தொடங்குகிறது "இன்னும் இரண்டு நாளில் ரீசார்ஜ் செய்யணும்" என்ற எண்ணம். முன்னொரு காலத்தில் 10 ரூபாய், 20 ரூபாய் போன்ற சிறிய ரீசார்ஜ் கார்டுகள் கிடைத்தன. விவசாயிகள், கூலி தொழிலாளர்கள், கிராமப்புற மக்கள் யாருக்காவது தேவையான அளவுக்கு மட்டுமே ரீசார்ஜ் செய்து கொண்டு இருந்தனர். யாராவது அழைக்கலாம் என்ற நம்பிக்கையில், 10 ரூபாய் போதும் என்ற நிலைமை. பேசத் தெரியாவிட்டாலும், அவர்களுக்கு பேசுவதற்கான வழி இருந்தது. ஆனால் இன்று அந்த 10 ரூபாய் கார்டும் இல்லை, 20 ரூபாய் கார்டும் இல்லை. எங்கே சென்றன அவை? நாம் இன்டர்நெட் பயன்படுத்தினாலும் சரி, பயன்படுத்தாவிட்டாலும் சரி அதற்கும் கட்டாயமாக பணம் செலுத்த வேண்டும்! இது எந்த விதத்தில் நியாயமாகும்? கிராமத்தில் வாழும் விவசாயிகள், கூலி தொழிலாளர்கள் இவர்களுக்கு இன்டர்நெட் தேவையே இல்லாதவர்கள். ஆனாலும் அவர்கள் மாதந்தோறும் 200 ரூபாய், 300 ரூபாய் செலுத்தி "டேட்டாவுடன்" சேர்த்த ரீசார்ஜ் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

முன்பு ரீசார்ஜ் செய்யவில்லை என்றாலும், சில மாதங்களுக்குஅழைப்புகள்வந்துக்கொண்டே இருக்கும். ஆனால் இப்போது? ரீசார்ஜ் முடிந்த மூன்று நாளில் அழைப்புகள் நிறுத்தபடுகிறது. "நீ ரீசார்ஜ் செய்யாமல் பேச முடியாது" ஏன் இந்த தடை? இது ஒரு பொறுப்பு மிக்க அரசாங்கம் கவனிக்க வேண்டிய பிரச்சினை அல்லவா? மட்டும் அல்லாது.... தனியாக வாழும் பெற்றோர்கள், மாணவர்கள் எல்லோரும் இதே நிலைமை. தொலைபேசி இன்று ஒரு அத்தியாவசியம் தான் . ஆனால் அது ரீசார்ஜ் எனும் கட்டாயத்தின் கைகளில் பூட்டப்பட்டுள்ளது.



கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை காந்தி சிலை அருகில், உலக தொழுநோய் எதிர்ப்பு தினத்தையொட்டி, தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டம் சார்பாக, ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழியை கலெக்டர் தினேஷ் குமார் தலைமையில், மருத்துவர்கள், சுகாதார துறை அலுவலர்கள், டிசிஆர் நர்சிங் கல்லூரி ஆசிரியர்கள், மாணவிகள் எடுத்துக்கொண்டனர்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது.



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் நடராஜா நகர் பகுதியில் உள்ள அருள்மிகு சக்தி விநாயகர்கோவில்கும்பாபிஷேகவிழாவையொட்டிபக்தர்கள்ஊர்வலமாகதீர்த்தக்குடங்கள் எடுத்து வந்தனர்.



குமரி சென்ற தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் கோதையாறு பாசனத் திட்ட குழு நிர்வாகிகள் மனு வழங்கியபோது எடுத்த படம்.



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அரசு கலைக்கல்லூரியில் காந்தி நினைவு தினம் தீண்டாமைஒழிப்புதினமாகஅனுஷ்டிக்கப்பட்டது. இதில் மாணவ, மாணவிகள்தீண்டாமை உறுதிமொழி ஏற்றனர்.



ஈரோடு கோட்டை சின்னபாவடியில் அமைந்துள்ள பத்திரகாளியம்மன் கோவில் குண்டம் திருவிழா நடைபெற்றது. இதில் பக்தர்கள் தீ மிதித்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.



கோவை சரவணம்பட்டி விசுவாசபுரம் விமல் ஜோதி பள்ளி அருகில் ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிழற்குடை அமைத்து பொது மக்களின் பயன்பாட்டிற்காக இன்று கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. திறந்து வைத்தார். அருகில் மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், தி.மு.க. மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, வடக்கு மண்டல தலைவர் வே.கதிர்வேல், மாமன்ற உறுப்பினர் கதிர்வேலுசாமி,வார்டு செயலாளர் ரங்கசாமி மற்றும் பலர் உள்ளனர்



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 'இது நம்ம ஆட்டம்–2026'. 2–வது நாளான சேலத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான 100 மீட்டர் ஓட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவரஞ்சன் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நாமக்கல்லில் மாணவியை கடத்தி பாலியல் தொந்தரவு செய்த பள்ளி பஸ் டிரைவர் கைது!

நாமக்கல்,பிப். 2

நாமக்கல் அன்புநகரை சேர்ந்த 11 வயது சிறுமி, தனியார் பள்ளி ஒன்றில் 6ம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த 28ந் தேதி காலை 7 மணி அளவில் ஷுவுக்கு பாலீஸ் போட்டு கொண்டு இருந்த மாணவி திடீரென மாயமானார்.



இது குறித்து அவரது பெற்றோர் நாமக்கல் காவல் நிலையத்தில் புகார் செய்தனர். அந்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மாயமான சிறுமியை தேடி வந்தனர். இதற்கிடையே அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தபோது, நாமக்கல் சாவடி தெருவில் வசித்து வந்த தனியார் பள்ளி பேருந்து ஓட்டுநர் உமாசங்கர் (44) என்பவர் சிறுமியை கடத்தி சென்று இருப்பது தெரியவந்தது.

இதற்கிடையே உமாசங்கர், அந்த சிறுமியுடன் உறவினர் ஒருவரது வீட்டில் காங்கேயத்தில் தங்கி இருப்பதாக போலீசாருக்கு ரகசிரய தகவல் கிடைத்தது.

இதையடுத்து அங்கு விரைந்து சென்ற போலீசார் சிறுமியை மீட்டனர். பின்னர் அவரை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர் மேலும் உமாசங்கரையும் பிடித்து விசாரணை செய்தனர். விசாரணையில் அவர் சிறுமிக்கு ஆசை வார்த்தை கூறி பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்து இருப்பது தெரியவந்தது.

எனவே இந்த வழக்கை நாமக்கல் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்திற்கு மாற்றம் செய்தனர். அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து உமாசங்கரைகைதுசெய்தனர்.தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. மாணவியை பள்ளி பஸ் டிரைவர் கடத்தி சென்று பாலியல் தொந்தரவு கொடுத்த சம்பவம் நாமக்கல்லில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### தேசிய விளையாட்டுப் போட்டி:

## சிலம்பம் பிரிவில் நாமக்கல் மாணவிக்கு தங்கம்!

ராசிபுரம், பிப். 2

29 ஆவது அகில இந்திய விளையாட்டுப் போட்டியானது கோவா ஜவாஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் ஜன. 24 முதல் 26 வரையில் நடைபெற்றது.



மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் அங்கீகாரத்து டன் நடைபெற்ற இப்போட்டியில் சிலம்பம், குத்துச்சண்டை, வில்வித்தை, கராத்தே, யோகா ஆகிய விளையாட்டுப் பிரிவுகள் இடம்பெற்றன. இதில் சிலம்பப் போட்டியில் நாடு முழுவதும் இருந்து 800 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். ஒற்றைக் கம்பு, இரட்டைக் கம்பு, மான் கொம்பு, சுருள் வாள், வேல் கம்பு, தொடுமுறை மற்றும் யோகா உள்ளிட்ட போட்டிகளில் 10,14,17,21 வயதுக்கு உள்பட்டோர் பங்கேற்றனர். இதில், தமிழகத்தை முன்னிலைப்படுத்தும்வகையில் நாமக்கல் மாணவி எஸ்.கே. ஹர்சினி பங்கேற்று தங்கப்பதக்கம் வென்றார். நாமக்கல்மாவட்டத்தைச்சேர்ந்தசிலம்ப வீரர், வீராங்கனைகளும் பங்கேற்று சிறப்பிடம் பெற்றனர். இதன்மூலம் நேபாளத்தில் மே மாதம் நடைபெறும் சர்வதேச சிலம்பப் போட்டிக்கு நாமக்கல் மாணவர்கள் தேர்வாகி உள்ளனர். இப்போட்டியில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற இந்திய தேசிய துப்பாக்கிச் சுடுதல் அணி வீரர் சிவம் தாக்கூர் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டினார்.

### தம்மம்பட்டி

## கோவில்களில் ஆக்கிரமிப்பை அகற்ற தீவிர நடவடிக்கை!

தம்மம்பட்டி,பிப்.2–

தம்மம்பட்டி சிவன்கோவில் மற்றும் பெருமாள் கோவில் நிலங்கள், உயர்நீதிமன்றம் உத்தரவின்படி முதன்முறையாக அளவீடு செய்யப்பட்டுள்ள நிலையில், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட உள்ளன.

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, தமிழகம் முழுவதும், இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான கோவில்களுக்குரிய நிலங்கள்,விவசாய நிலங்கள் அனைத்தும் மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, தம்மம்பட்டி சிவன்கோவில் மற்றும் பெருமாள் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள், விவசாய நிலங்களை அளவீடு செய்ய தனிவட்டாட்சியர் உத்தரவிட்டிருந்தார்.

அதையடுத்து, இந்துசமய அறநிலையத்துறையின் சர்வேயர் சின்னதுரை உள்ளிட்ட நில அளவையாளர்கள், தம்மம்பட்டி சிவன்கோவில்,பெருமாள் கோவில்களின் தலைமை அறங்காவலர் சண்முகம் முன்னிலையில் செயற்கைக்கோள் உதவியுடன் மிகவும் துல்லியமாக அளவீடு செய்யப்பட்டு, சிவன் கோவில், பெருமாள் கோவில் இடத்தை சுற்றி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடங்களிலும், கோயிலுக்கு சொந்தமான விவசாய நிலங்களில் என தனியார் ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு, மொத்தம் 98 அளவுக்கற்கள் நடப்பட்டன.

இதுகுறித்து தலைமை அறங்காவலர் சண்முகம் கூறும்போது, நீதிமன்ற உத்தரவுப்படிதான் இந்த அளவீடு பணி நடைபெற்றது. அளவுக்கற்கள் நடப்பட்ட பகுதிகளுக்குள் இருக்கும் கோவில் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அரசு உத்தரவுப்படி விரைவில் மீட்டு கோவில்கள் வசம் கொண்டு வரப்படும், தம்மம்பட்டியில் கோவில்களுக்கு சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்கள் மேலும் தொடர்ந்து அளவீடு செய்யப்படும் என்று கூறப்படுகிறது, என்றார்.

### நல்லம்பள்ளி அருகே பரபரப்பு:

## பஸ்சுக்காக காத்திருந்த மாணவிக்கு தாலி கட்ட முயன்ற வாலிபர்!

### போலீசார் விசாரணை!!

நல்லம்பள்ளி,பிப்.2–

நல்லம்பள்ளி அருகே பஸ்சுக்காக காத்திருந்த மாணவிக்கு ஒரு வாலிபர் வலுக்கட்டாயமாக தாலி கட்ட முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது.இது பற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி அருகே ஒரு கிராமத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது.இந்த பேருந்து நிறுத்தத்தில், தர்மபுரி பகுதியில் செயல்படும் கல்லூரி செல்ல மாணவி ஒருவர் நின்றிருந்தார்.

அப்போது அந்த பேருந்து நிறுத்த பகுதி அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த ஒரு வாலிபர் கல்லூரி செல்ல பேருந்திற்காக காத்திருந்த மாணவி கழுத்தில், தங்க தாலி கட்ட முயன்றுள்ளார். இதனை அறிந்த மாணவி, இளைஞர் கட்ட முயன்ற தங்கத் தாலியை கீழே தட்டி விட்டு சத்தமிட்டுள்ளார். உடனே அந்த தாலியை மீண்டும், கல்லூரி மாணவி மீது வீசி விட்டு, அந்த வாலிபர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கல்லூரிக்கு செல்ல பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்த மாணவிக்கு கட்டாயப்படுத்தி இளைஞர் ஒருவர் தாலி கட்ட முயன்ற விவகாரம் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



### ஒகேனக்கல்லில்

## பூங்கா செடிகள் செழிக்க நூதன முறையில் பாசன ஏற்பாடு!

பென்னாகரம், பிப்.2

ஒகேனக்கல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய த்திலிருந்து வெளியேறும் சுத்திகரிப்பு நீரை செடிகளுக்கு பயன்படுத்தும் நோக்கத்தில் ஆரண்யா பூங்கா பகுதியில் 60 செடிகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த ஒகேனக்கல் சுற்றுலா தளத்தில் தங்கும் விடுதிகள் வீடுகள் மற்றும் வணிக வளாகங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை, பாதாள சாக்கடை அமைத்து கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டம் மூலமாக சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது.இந்த சுத்திகரிப்பு நிலையத்தி லிருந்து வெளியேறும் சுத்திகரிப்பு நீரை செடிகளுக்கு மற்றும் அருகில் உள்ள மரங்களுக்கு பயன்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலமாக செடிகள் நடும் பணி நடைபெற்றது. இந்த நிகழ்வில் பென்னாகரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சக்திவேல், லோகநாதன் ஆகியோர் தலைமையில் ஆரண்ய பூங்கா பகுதியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகே சுமார் 120க்கும் மேற்பட்ட செடிகள் நடப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்க ப்பட்ட நீர் செடிகளுக்கு விடப்படும் பணி நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஒகேனக்கல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பொறியாளர் நவீன் பென்னாகரம் ஒன்றிய பொறியாளர் தமிழரசன், பென்னாகரம் ஒன்றிய பணி மேற்பார்வை யாளர் செல்வம், கூத்தப்பாடி ஊராட்சி செயலாளர் குமரன் மற்றும் உணவு பாதுகாப்பு துறை அலுவலர் வேணுகோபால் ஒகேனக்கல் மீன்வள ஆய்வாளர் வேலுச்சாமி உள்ளி ட்டர் கலந்து கொண்டனர்.



சேலத்தில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமினை கவுன்சிலர் தெய்வலிங்கம் துவக்கி வைத்தார். அருகில் நிர்வாகிகள் மற்றும் மருத்துவர்கள் உள்ளனர்.



கோவை கோவனூரில் பழமையான அரங்கநாயகி தாயார் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் ஏளானமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

### காமத்துக்கு கண் இல்லை:

## மருமகளுடன் சேர்ந்து மனைவியைக் கொன்ற மாமனார் !

### உல்லாசமாக இருந்ததை நேரில் பார்த்ததால் ஆத்திரம்!!

லக்னோ, பிப்.2–

உத்தரபிரதேசத்தில் மருமகளுடன் சேர்ந்து தனது மனைவியைக் கொன்ற மாமனார் கைது செய்யப்பட்டார்.

இருவரும் உல்லாசமாக இருந்ததை நேரில் பார்த்ததால் வெறிச்செயலில் ஈடுபட்டனர்.

உத்தரப் பிரதேச மாநிலம் குஷிநகரைச் சேர்ந்தவர் குர்கு யாதவ் (55). இவரின் மனைவி கீதா தேவி(50). இவர்களது மகன் தீபக். திருமணமாகி விட்டது. மகன் வெளியில் வேலைக்கு சென்று வருகிறார்.

இந்த நிலையில் மாமனாருக்கும் மருமகளுக்கும் இடையே கள்ளக் காதல் ஏற்பட்டது. இந்த விவகாரம் கீதா தேவிக்கு தெரிய வந்தது. சம்பவத்தன்று வீட்டில் யாரும் இல்லாதபோது மாமனாரும் மருமகளும் தனிமையில் இருந்தனர். அந்த சமயத்தில் மாமியார் கீதா தேவி வந்து விட்டார். எனவே இருவரையும் கையும் களவுமாகப் பிடித்துள்ளார். இதனால் அவர்கள் பயந்த நிலையில் இந்த ரகசியத்தை மகன் மற்றும் ஊர் மக்களிடம் அம்பலப்படுத்துவேன் என்று கீதா தேவி மிரட்டினர்.

இதனால் ஆத்திரமடைந்த இருவரும் சேர்ந்து கீதாதேவியை கொலை செய்ய திட்டமிட்டனர். இதைத் தொடர்ந்து செங்கற்கள் மற்றும் மரக்கட்டைகளால் அவரது தலையில் கொடூரமாக தாக்கி, துடிக்கத் துடிக்கக் கொலை செய்தனர். பின்னர், சடலத்தை கழிவறைக்குள் மறைத்து வைத்துவிட்டு எதுவும் நடக்காத மாதிரி இருந்தனர். மாலையில் வீடு திரும்பிய மகன் அம்மா, கீதா தேவியை தேடினார். அப்போது குர்கு யாதவ், மனைவி கீதா தேவி வேறொரு ஆணுடன் ஓடிவிட்டதாக மகனிடம் நாடகமாடினர்.

கொலையை மறைக்க கீதாவின் நடத்தையிலேயே பழி சுமத்தினர்.

இது குறித்து போலீசில் புகார் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் விசாரித்த போது கழிவறையில் இருந்த சடலத்தை மீட்ட போலீசார், பின்பு விசாரணையில் மாமனாரும் மருமகளும் உண்மையை ஒப்புக்கொண்டனர். இதையடுத்து, இருவரையும் கைது செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இச்சம்பவம் அங்கு பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



திருப்பத்தூர் மாவட்டம்.உலகம் உங்கள் கையில்.என்ற திட்டத்தின் மூலம் கல்லூரி மாணவ , மாணவியருக்கு மடிக்கணிணிகள் வழங்கும் விழா, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் , மாவட்ட ஆட்சியர் சிவசௌந்திரவள்ளி தலைமையில் நடைபெற்றது. திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி , திருப்பத்தூர் நகர கழக செயலாளர் வழக்கறிஞர் சு.இராசேந்திரன் கலந்துகொண்டு மாணவ , மாணவியருக்கு மடிக்கணிணிகள் வழங்கினார். இந்நிகழ்வில் துறை சார்ந்த அலுவலர்கள் கல்லூரி மாணவர் மாணவியர்கள் கலந்துகொண்டனர்.



### ராசிபுரம் அருகே

## அரசு பஸ் மோதி நடுரோட்டில் தலைக்குப்புற கவிழ்ந்த கார்!

### மத்திய அரசு அதிகாரி உயிர் தப்பினார்!!

ராசிபுரம்,பிப்.2–

ராசிபுரம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் அரசு பஸ் மோதியதில் தலைக்குப்புற கார் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. இதில் மத்திய அரசு அதிகாரி லேசான காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

திருச்சி மாநகர அன்பில் நகரை சேர்ந்தவர் ஆறுமுகம் (48). இவர் சேலத்தில் ஜிஎஸ்டி மற்றும் சுங்கவரி பிரிவில் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறார்.

சேலத்தில் இருந்து திருச்சிக்கு காரில் புறப்பட்டு சென்றார். சேலம் நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் ராசிபுரம் அடுத்த பாச்சல் அருகே சென்ற போது பின்னால் வந்த அரசு பேருந்து அந்த கார் மீது மோதியது.

அதில் நிலை தடுமாறிய கார் எதிர் திசை சாலைக்கு சென்று தலை குப்புற கவிழ்ந்தது.இதில் அதிகாரி ஆறுமுகம் லேசான காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இதனிடையே தேசிய நெடுஞ்சாலையிலேயே கார் கவிழ்ந்து கிடந்ததால், போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.அதன் காரணமாக இணைப்புச் சாலை வழியாக வாகனங்கள் திருப்பி விடப்பட்டன.

விபத்து தொடர்பாக புதுச்சத்திரம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.